**குருநாகலை மாநகர சபை - 2023**
**----------------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

குருநாகலை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

குருநாகலை மாநகர சபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றினை நான் வெளிப்படுத்தவில்லை. மறுப்பு அபிப்பிராய அடிப்படையில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதற்கு அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக மறுப்பு அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற

கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின், முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள்தெயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கால்லவத்த சனசமூக நிலையம் அமைந்துள்ள காணி 2020 ஆண்டின் ரூபா 8,000,000 இற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு பிழையான நாட்குறிப்பொன்று பதிவு செய்து அந்தக் காணியின் பெறுமதியை ரூபா 1,923,698 இனால் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை ஏனைய வருமானக் கணக்கு ரூபா 500,000 தொகை மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுந்தராபொல குப்பை செயற்களத்தில் காணப்பட்ட ரூபா 3,752,967 தொகை பெறுமதியான உரப் பைகள் இருப்பினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுன்தராபொல குப்பை செயற்களத்தில் காணப்பட்ட ரூபா 41,625 தொகை பெறுமதியான பொதி செய்யப்பட்ட 25 கிலோ கிராம் அளவுடைய 111 உரப் பைகள் இருப்புக் கணக்கில் கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது கட்டிட நிர்மாண வேலைகளுக்காக மேற்கொண்டிருந்த 04 செயற்திட்டங்களின் பெறுமதியாகிய ரூபா 242,760,136 தொகை மிகையாகவும், 05 செயற்திட்டங்களின் பெறுமதியாகிய ரூபா 553,489,428 தொகை குறைவாகவும் மூதலனப்படுத்தியிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | 2022 ஆண்டில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக மேற்கொண்டிருந்த ரூபா 10,915,837 இற்கான தொகையொன்றினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் போது தொடர்ந்துவரும் ஆண்டிற்காக கிடைத்திருந்த வீதவரி ரூபா 755,069 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வீதவரி முற்பெறுவனவுகளின் கீழ் குறைவாக பதியப்பட்டிருந்ததுடன், அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது மந்திரிமாரின் தொலைபேசிக் கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு முறையே ரூபா 532,562 தொகை மற்றும் ரூபா 1,176,270 தொகையினை சபை நிதியத்திலிருந்த செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகை மீளளிப்புச் செய்யப்படாமையால் அந்தப் பெறுமதி கடன் பட்டோர்களுக்கு மிகையாகவும் மற்றும் காசுமீதி குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | மீளளிப்பு செய்யப்படாத இந்தப் படிகள் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீளளிப்பு செய்யப்படாத படிகளை கோறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது. |
| (ஐ) | மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்டிருந்த 23 தார் பீப்பாக்களின் பெறுமதியாகிய ரூபா 799,020 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குருநாகல் மாநகர சபை வளாகத்தில் காணப்படும் தொலைத் தொடர்பு செலுத்துகை தூண்கள் | நாட்குறிப்புப் பதிவின் மூலம் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்த பெற வேண்டியிருந்த ரூபா 49,500 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (ஓ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வேலைகள் ஆரம்பிக்கபட்டிருக்காத வெகர விளையாட்டுத் திடலின் 02 கழிவறைகள் மற்றும் தபால் திணைக்களத்தின் 03 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் நிர்மாணித்தலின் பாதீட்டுப் பெறுமதி ரூபா 40,000,000 தொகை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | செயற்திட்டம் நிறைவேற்றப்படாவிடினும், இதுவரை காணப்பட்ட செய்முறையின் படி கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளும் போது மூலதன செலவீட்டிற்கான வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு போலவே சொத்துக் கணக்கிற்கும் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது என. | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் மூலதனப்படுத்த வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,427,577 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாக சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (க) | 18 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த இடர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை நிதிக்கூற்றுக்களில் 169,343 தொகை குறைவாகவுமம் 19 ஊழியர்களிடன் அறவிடப்பட வேண்டிய இடர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 249,795 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ங) | 2023 ஆண்டு தொடர்பாக 2024 ஜனவரி 31 திகதி கருங்கற்கள் (சிப்ஸ்) மற்றுக் கொங்கிரீட் கருங்கற்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்தியிருந்த ரூபா 480,175 தொகை பெறுமதியினை கடன்கொடுத்தோர் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ச) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மத்திய கடுகதிப் பாதை ii ஆவது செய்திட்டத்திற்காக சேவைகள் வழங்கியது தொடர்பாக பெற வேண்டிய வருமானம் ரூபா 248,670 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகள் உரிய முறையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 91,216,058 தொகைக்கான 06 வைப்புக் கணக்குகள் தொடரபான மீதி மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 209,696,984 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அட்டவணைகள் சரி செய்யப்படுவதுடன், மீண்டும் பரிசோதனை செய்து அட்டவணைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டு சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 677,941,590 தொகைக்காக 15 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 257,639,825 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | 15 கணக்கு விடயங்கள் தொடர்பான அட்டவணைகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டு சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நடைமுறை அல்லாத சொத்துக் கணக்குகளின் மீதி மற்றும் மூலதன செலவுகளுக்கான அரசிறை உதவு தொகை கணக்கின் மீதி சமமாக இருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை அல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 4,759,033,885 தொகையாக காண்பட்டதுடன், மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகைக் கணக்கின் மீதி ரூபா 4,778,717,488 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 19,683,603 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | 2019 ஆண்டு முதல் காணப்படுகின்ற வித்தியாசம் ஒன்றென இனங்காணப்பட்டதுடன், பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களுக்கான காரணங்களை கண்டு சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி இருப்புப் பெறுமதி ரூபா 90,089,076 தொகை எனினும், வருடாந்த களஞ்சிய இருப்புக் கணிப்பீடொன்று மேற்கொண்டு அந்த அறிக்கையின் பிரதியொன்று 2024 மே 17 திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்காமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள இறுதி இருப்பின் மீதிப் பெறுமதியை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் தற்போது நடைபெறுவதுடன், கணிப்பீட்டு அலுவல்களை மிகவும் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு பூர்த்தி செய்தவுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என. | வருடாந்த களஞ்சிய இருப்புக் கணிப்பீடு இறுதிக் கணக்குகள் தயாரிப்பதற்கு முன்னர் நிறைவேற்ற வேண்டும். |
| (ஆ) | தகவல்கள் சமர்பிக்கப்படாத காரணத்தினால் கூட்டுத்தொகை ரூபா 284,533,423 தொகை பெறுமதியான 11 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | 11 கணக்கு விடயங்கள் தொடர்பாக அட்டவணைகள் எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2024 மார்ச் 31 திகதி அளவிலும் பதில் அனுப்பியிருக்காமையால் அந்த ஐயவினாக்கள் தொடர்பான கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 308,659,531 தொகையாக இருந்தது. | கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதில் தயாரிக்கப்பட்டு விரைவாக உரிய விளக்கங்களுடன் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நியதிச் சட்டக் கடமையொன்றென கணித்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்திற்கு இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1947 இன் 16 ஆம் இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டம் | | | |
| | அதிகாரம் 252 | அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் பொதுக் கூட்டத்தின் தீர்மானத்தின் மீது | கூறுவிலைகள் அழைக்கப்பட்டு விற்பனவு செய்தல் / வாடகைக்கு | மேற்கூறிய அதிகாரத்திற்கு இணங்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபைக்குச் சொந்தமான MC PLAZA 11 கடையறைகள் நீண்ட கால வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கொடுத்தல் மேற்கொள்ளப்படுவதுடன், திறந்த கூறுவிலைகள் அழைக்கப்படும் சந்தர்ப்பங்களில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் பூர்வாங்க எழுத்துமூல அங்கீகாரம் பெற்றுக்கொண்டு முறைப் பிரகாரம் விற்பனை செய்தல் அல்லது வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது என. | செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 881(1) | வருமானப் பரிசோதகர் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்திருந்த காவலாளர் மற்றும் ஈமக்கிரியைக்கூட உதவியாளர் பதவி வகித்தல் இரண்டு ஊழியர்களும் பிணை வைத்திருக்கவில்லை. | பிணை வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ii) | நிதிப் பிரமாணம் 1645(ஈ) | வாகனங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் ஒவ்வொரு பிரயாணம் முடிவடைந்தவுடனே மாதாந்த ஓட்ட அட்டவணையில் மேற்கொள்ள வேண்டிய தகவல்கள் பதியும் படி விதிக்கப்பட்டிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் படி சபைக்கு சொந்தமான 11 வாகனங்களின் ஓட்ட அட்டவணையின் படி மைலோ மீற்றர் மற்றும் வாகனத்தின் மைலோ மீற்றர் வாசித்தல் இடையே 2,987 கி.மீ. வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | ஓட்ட அட்டவணைகளில் மைலோ மீற்றர்கள் கணித்தல் சரியாக மேற்கொள்ளுமாறு சாரதிகளுக்கு அறிவுருத்தப்பட்டுள்ளது என. | தேவையான குறைபாடுகள் சரி செய்யப்பட்டு ஒவ்வொரு பிரயாணமும் முடிவடைந்த பின்னர் நாளந்த ஓட்ட அட்டவணைகள் பதியப்பட வேண்டும். |
| (இ) | அரச நிதிச் சுற்றறிக்கைகள் | | | |
| | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 | நகர சபைக்குச் சொந்தமான பாவனைக்கு உதவாத நிலையில் காணப்பட்ட 05 | வாகனங்களை அப்புறப்படுத்துவதற்காக | மேற்கூறியவாறு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின்,<br><br>பந்தி 13.2 | வாகனங்கள் தொடர்பாக மேற்கூறிய சுற்றறிக்கை இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | பொது நிருவாகச் சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2002 பெப்ரவரி 25 திகதிய 01/2002 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | நகர சபைக்குச் சொந்தமான 60 வாகனங்களின் அரச இலச்சினை பதிந்திருக்கவில்லை. | அரச இலச்சினை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | அரச இலச்சினையுடன் பெயரை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் 3(1) | மாநகர சபைக்கு சொந்தமான 64 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவுப் பரிசோதனை தற்பொது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (உ) | 1989 ஜனவரி 20 திகதிய 541(17) இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி | | | |
| | xxi(I) பகுதியில் மீன் விற்பனை தொடர்பான துணைச் சட்டம் | நகர எல்லையில் அங்கீகாரம் இன்றிய மீன் விற்பனை நிலையங்கள் பாரிய எண்ணிக்கையானவை காணப்படுவதுடன், அந்த வியாபார நிலையங்களினால் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்காமல் வியாபார அலுவல்களில் ஈடுபட்டிருந்தனர். | அங்கீகாரம் ஏதும் இன்றி வியாபார நடவடிக்கையின் ஈடுபடும் அங்கீகாரமற்ற வியாபார நிலையங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்கூறிய துணைச் சட்டங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 144,435,202 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 12,835,988 தொகையாக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பளிக்கப்படாத காசோலைகளின் அட்டவணையின் படி 03 மாதங்களுக்கும் 16 வருடங்களும் இடைப்பட்ட மதிப்பளிக்கப்படாத 26 காசோலைகள் தொடர்பாக ரூபா 1,312,519 இற்கான மீதி மீளாய்வாண்டளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 494,500 | 511,538 | 443,758 | 334,158 | 369,500 | 344,497 | 355,480 | 255,777 |
| (ii) | வாடகை | 116,375 | 101,548 | 105,585 | 10,441 | 88,824 | 75,916 | 72,414 | 14,584 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 16,402 | 29,439 | 29,439 | - | 15,380 | 19,489 | 19,489 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 655,365 | 491,596 | 501,211 | 121,571 | 539,427 | 423,976 | 523,956 | 42,960 |
| | மொத்தம் | 1,282,642 | 1,134,121 | 1,079,993 | 466,170 | 1,013,131 | 863,878 | 971,339 | 313,321 |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 1,134 மில்லியனாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் உட்பட ரூபா 1,079 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 466 மில்லியன் தொகை மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சிட்டையிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நகர சபைக்கு சொந்தமான காணிகளில் இருந்து தரை வாடகை என மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,325,203 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவையை அறவீடு செய்தல் உடன்படிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | MC PLAZA இலக்கம் D கடையறைக்காக கூடிய விலைகூறல்கள் சமர்ப்பித்திருந்த விலைகூரல்தாரர்களிடம் 2022 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டிய மீதித் தொகையாகிய ரூபா 6,406,639 இற்காக தொகையினை அறவீடு செய்திருக்காததுடன், உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல் வெற்று புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கோப்பில் உட்படுத்தப்பட்டிருந்தது. | கடையறையை உரித்தாக்கி மீண்டும் வாடகைக்கு கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முறைப் பிரகாரம் மேற்கொள்ளப்படும் என. | உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2023 ஜூன் 13 திகதி முதல் 2023 ஜூன் 19 திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி ஒரு நாளைக்கு பஸ் நிலையத்தில் இரண்டு பொதுக் கழிவறைகளிலிருந்து சராசரி வருமானம் ரூபா 77,000 தொகை கிடைக்கின்றது என அவதானிக்கப்பட்டது. அதன்படி, தற்போது ஒரு மாதத்திற்கு அறவிடப்படும் ரூபா 402,627 இற்கான தொகை போதியளவாக காணப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது. | இது தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்ற பின்னர் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியான வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2022 செப்தம்பர் 31 திகதி அளவில் மத்திய சந்தை கடையறைகளில் 29 கடையறைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 90,546,072 தொகை மற்றும் கொடுப்பனவு தாமத்தின் காரணமாக 10 சதவீதத் தண்டப்பணம் 2023 திசெம்பர் அளவிலும் அறவீடு செய்வதற்கு | எதிர்பாராத விதமாக கடையறைகள் நிர்மாணிக்கும் அலுவல்கள் பூர்த்தி செய்ய முடியாமல் போனதுடன், Key money அறவீடு செய்தல் | நிர்மாண வேலை செய்து டெண்டர் வழங்கப்பட்டு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது பணம் செலுத்தாத கடையறைகளை சபைக்கு உரத்தாக்கி மீண்டும் டெண்டர் பண்ணுவதற்கு சபை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்பாக இறுதித் தீர்மானம் ஒன்று எடுக்கும் வரை கடையறைகளை உரித்தாக்குவதற்கு சட்ட நிலைமையொன்று காணப்படாததுடன், கடைகள் தற்போதும் ஒப்படைக்கக் கூடிய நிலைமையில் காணப்படாமையால் கடையறைகளை நகர சபைக்கு உரித்தாக்குவதற்கு முடியாது என. | |
| (ஊ) | மீளாய்வாண்டிடு இறுதியிலுள்ளவாறு பெற வேண்டிய நிலுவைக் கடை வாடகை ரூபா 8,148,640 தொகை காணப்பட்டது. | கொடுப்பனவு செய்யாத கடையறைகளை சீல் வைக்கப்பட்டுள்ளது என. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | நகர சபைக்குச் சொந்தமான ரன்தலிய வாடி வீட்டில் இருந்து மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 4,632,469 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு சாக்கடை முறைமையின் நிலுவை மீதி ரூபா 148,033,671 தொகையாக காணப்பட்டது. | எதிர் காலத்தில் துணைச் சட்டமொன்று ஆக்கப்பட்டு அல்லது ஏனைய மாற்று மூலோபாய முறைகளின் மூலம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நிலுவை நீர்க் கட்டண மீதி ரூபா 101,661,410 தொகையாக காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

#### 2.3.3 மிகை விதிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் மீளாய்வாண்டின் போது ரூபா 51,361,200 தொகை பெறுமதியான 02 மிகை விதிப்புக்கள் விதிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆணடின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்பு உட்பட 2024 மே 31 திகதியில் உள்ளவாறு ரூபா 450,000 இற்கான தொகையொன்று மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 1,000,000 இற்கான தொகையொன்று மிகை விதித்தல் தொடர்பாக இது வரை ரூபா 550,000 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீதித் தொகை அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. | மிகை விதிப்புப் பெறுமதி அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள கருமங்களை மேற்கொள்ளல்

#### (அ) செய்பணிகள் நிறைவேற்றுதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குருநாகல் நகர அபிவிருத்தி செய்தல் தொடர்பான வடிகால அமைப்புத் திட்டம் (Master Drainage Plan) திருத்தம் தொடர்பான வெளிக்களப் பரிசோதனைக்கான 2022 மே 17 திகதி ரூபா 540,000 இற்கான தொகையொன்றிற்கு பெறுமதி கூட்டிய வரியுடன் முற்பணம் ஒன்றென இலங்கை காணி அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, 2022 மே 06 திகதி இலக்கம் GC/06/62/2022/04/20/MED/C7 கொண்ட பொதுக்கூட்ட தீர்மானத்தின் படி குருநாகல் நகரத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக வடிகால் அமைப்பு திட்டம் திருத்துவது தொடர்பான கருமங்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடு ஒன்றென கவனம் செலுத்தி இந்த கருமத்தை நிறைவேற்றுவதற்காக முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் நிறைவேற்றியிருக்கவில்லை. | குறிப்பிட்ட ஏனைய தரப்பினருடன் கலந்துரையாடி இறுதித் திட்டமொன்று தயாரிக்கப்படவுள்ளது என. | கருமம் முடிவடைந்தவுடன் முற்பணம் தீர்க்கப்பட வேண்டும். |

**(ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாடுகளின் மீது 2019 ஆண்டின் போது ரூபா 123 மில்லியன் தொகை பெறுமதியான கவ்ஷிகா சேதனப் பசளை இயந்திரம் சுந்தராபொல குப்பை செயற்களத்தில் பொறுத்தப்பட்டிருந்தது. இந்த இயந்திரத்தின் கொள்திறன் 50 டொன்களாக காணப்பட்ட போதிலும், ஒரு நாளைக்கு 30 டொன் குப்பைகள் மாத்திரம் பயன்படுத்தப்படுவதால் உச்சமாட்ட கொள்திறனை பயன்படுத்தியிருக்கவில்லை. | நகரத்தில் உக்கக்கூடிய குப்பைகள் என உருவாக்கப்படுகின்ற 30 டொன் எண்ணிக்கை காணப்படுவதால் எதிர் கால நோக்கத்தை கவனத்தில் எடுத்து இந்த இயந்திரம் பொறுத்தப்பட்டது என. | இயந்திரத்தின் உச்சமட்ட பயன்பாட்டை பெற வேண்டும். |

**3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குருநாகல் வில்கொட பாதையில் அமைந்துள்ள வில்கொட முதுகல காணி 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 6,000,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதனை மீளாய்வாண்டு திசெம்பர் அளவிலும் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் காடுகள் வளர்ந்து விளைவற்று காணப்பட்டது. | இந்தக் காணியை பயன்படுத்துவதற்கு பொருத்தமான முதலீட்டாளர் ஒருவரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விளைவின்றி வைக்காமல் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வெளிக்கள உத்தியோகத்தர்களுக்காக புதிய மென்பொருள் ஒன்றின் கீழ் கடமை மேற்கொள்ளும் குறிக்கோளுடன் 2022 ஆண்டின் போது ரூபா 2,046,000 தொகை பெறுமதிக்கு 60 கணினி டெப்கள் கொள்வனவு செய்யப்பட்டு உத்தியோகத்தர்களிடையே வினியோகிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டளவில் மேற்கூடிய 05 டெப்கள் ஏலவிற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், மேலும் 06 டெப்கள் செயற்படாத நிலைமையில் காணப்பட்டமையால் களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், மீதி 49 | இந்த டெப்கள் 2020 ஆண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், மென்பொருளை செயற்படுத்துவதற்கு தேவையான ஏனைய துணைக் கருவிகள் அப்போது நாட்டில் நிலவிய சூழலில் பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | மென்பொருளை பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

டெப்கள் 47 உத்தியோகத்தர்களிடம் காணப்பட்டது. அதன்படி, புதிய மென்பொருளின் கீழ் கடமை மேற்கொள்வதற்காக மேற்கூறிய டெப்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபை அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 09 மடி கணினிகளின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 2,296,997 தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபை அங்கத்தவர்களுக்கு பெறுமதி மதிப்பீடு தொடர்பாக அறிவுறுத்தி, கணினிகளின் பெறுமதியினை அறவீடு செய்வதற்கு அல்லது கணினிகளை மீண்டும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஜயன்திபுர பிரதேச மக்களின் பொது அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 01 ரூட் 35 பர்சஸ் காணி தனியார் நிறுவனம் ஒன்றினால் தமது வியாபார அலுவல்களுக்காக சபையின் அங்கீகாரம் இன்றி நீண்ட காலம் முதல் பயன்பட்டு வந்துள்ளது. | 2024 மே 08 திகதி நடைபெற்ற செயற்பாடுகள் மற்றும் நிதி முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் தீர்மானத்தின் படி தொடர் நடவடிக்கை எடுப்பேன். | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் மற்றும் அங்கீகாரமற்ற அபகரித்தல் தொடர்பாக சட்டச் செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீண்ட காலமாக காணப்படுகின்ற இனங்காண முடியாத ஊழியர் கடன் மீதி ரூபா 45,586,008 தொகையினை தீர்த்திருக்கவில்லை. | அவதானிப்புகளுக்காக கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் ஊழியர் கடன் அட்டவணையின் கூட்டுத்தொகை ரூபா 1,177,151 தொகையாகிய 58 விழா முற்பணக் கடன் மீதிகள், 40 விஷேட கடன் மீதிகள் மற்றும் 17 இடர் கடன் மீதிகள் கடன் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதிவேடுகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்ற, இறந்த, இடமாற்றப்பட்டுள்ள மற்றும் சம்பளம் இடைநிறுத்தப்பட்டுள்ள போன்ற காரணங்களினால் 23 உத்தியோகத்தர்களிடம் ரூபா 2,277,451 தொகை கடன்மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | பரிசோதனை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன்மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாரிய குருநாகல் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் மூலம் குருநாகல் மாநகர சபை அதிகார பிரதேசத்தில் நுகர்வோருக்கு வினியோகிப்பதற்காக மாகாண சபையினால் பணம் செலுத்தி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மொத்த நீரிலிருந்து 38 சதவீதத்திற்கும் மிகையான எண்ணிக்கையொன்று விரயம் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் நீர் வினியோகத்தை முறைப்படுத்துவதற்காக மொத்த நீர் மானிகள் பொருத்துவதற்காக ரூபா 2,264,700 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த உபகரணங்கள் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டது. | நீர் விரயத்தை இனங்காணப்பதற்காக நீர் வழங்கல் சபையுடன் இணைந்து மொத்த நீர் மானிகள் பொறுத்துவதற்காக உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நீர் விரயத்தை குறைத்து அதன் அனுகூலத்தை நுகர்வோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | குருநாகல MC Plazza வர்த்தகக் கட்டிடத் தொகுதியை துப்புரவு செய்வதற்கான சேவை ஒப்பந்த வேலை உடன்படிக்கைக் காலம் 2022 திசெம்பர் 31 திகதி முடிவடைந்திருந்த போதிலும், கால நீடிப்பு அல்லது புதிய சேவை உடன்படிக்கைக்கு அனுகுதல் இன்றி ஒரே ஒப்பந்தக்காரருக்கு 2023 ஜூன் 30 திகதி வரை மேலதிகமாக 06 மாதங்களுக்கு சேவையை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 1,376,670 தெகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு பாதீடு அங்கீகரிக்கப்படாமையால் புதிய நிறுவனம் ஒன்றை தெரிவு செய்வதற்கு டென்டர் அழைக்க முடியாமல் இருந்தமையால் சேவை வழங்கிய நிறுவனத்திடம் குறிப்பிட்ட சேவையை பெற்றுக்கொண்டது என. | சேவைகள் முடிவடைய முன்னர் புதிய உடன்படிக்கையொன்று மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து கணக்காய்வுத் திகதியாகிய 2024 மே 17 திகதி வரை உடன்படிக்கையொன்றின்றி குருநாகல் பஸ் நிலைய கழிவறை சுத்திகரிப்புக் கருமங்கள் முன்னைய குத்தகையாளருக்கே வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, டென்டர் நடைமுறையொன்று இன்றி பொதுக்கூட்ட தீர்மானத்திற்காக 05 வருடங்களாக நீடிப்பதற்காக ஆளுனரின் செயலாளரினால் 10 வருடங்கள் வரை நீடித்த சரச்சைக்குரிய தன்மையுடைய விடயமாகும். | ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக சட்டமா அதிபரிடம் வினவப்பட்டுள்ளதுடன், பதில் கிடைத்த பின்னர் அந்த அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்ட ஆலோசனைகளின் படி செயற்பட வேண்டும். |

### 3.7 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வில்கொட மோலவத்த காணி நகர சபைக்குச் சொந்தமான மிக விசாலமான பொருளாதார பெறுமதியுடைய 14 பர்சஸ் காணியொன்றாக காணப்பட்டதுடன், அங்கு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத கட்டிடம் ஒன்று காணப்பட்டதுடன், அதனை சனசமூக நிலையமொன்றாக பயன்படுத்துவற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமல் இருந்தது. | கட்டிடத்தின் மீதியான அலுவல்களை நிர்மாணிப்பதற்காக தேவையான அலுவல்கள் வழங்கப்பட்டு அந்தப் பிரதேசத்தில் பொதுத் தேவைப்பாட்டிற்காக இந்தக் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சபையின் ஆதனங்களை பயன்படுத்தல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | பொறியியல் பிரிவினால் 2021 ஆண்டின் ஜுலை மாதத்தில் கட்டளையிடப்பட்ட PE நீர்க் குழாய் உபகரணங்கள் 2021 ஜுலை மாதத்தில் கொள்வனவு செய்திருந்த போதிலும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் ரூபா 1,187,000 தொகை பெறுமதியான 05 வகையான நீர் உபகரணங்கள் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டது. | தற்போது நீர்க் குழாய் துணைக் கருவிகள் இடையிடையே மேற்கொள்ளப்படும் நீர் பராமரிப்பு நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படுவதுடன், மீதியான நீர்க் குழாய் உபகரணங்கள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் பரிமாரிக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. | உச்ச மட்ட இருப்பொன்று களஞ்சியத்தில் பேணிச் செல்ல வேண்டும். |

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிஷ்ஷங்க மாவத்தையில் ஐந்தாவது ஒழுங்கையில் நகர சபைக்குச் சொந்தமான வெஹெர வத்த காணியில் அமைந்துள்ள பொதுக் கினறுடனான அண்ணளவாக 20 பர்சஸ் காணி குத்தகைக்கு கொடுக்கப்படாமல் நபர் ஒருவரினால் அங்கீகாரம் இன்றி அனுபவித்து வரப்படுகின்றது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீடு கிடைத்த பின்னர் குழுவின் பரிந்துரையின் படி இந்தக் காணிகளில் உள்ள அங்கீகாரமற்ற வதிபவர்கள் தொடர்பாக எதிர் காலத்தில் தீர்மானம் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | அங்கீகாரமற்ற வதிவோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நகர சபைக்கு சொந்தமான நிஷ்ஷங்க மாவத்தையில் 05 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள வெஹெர வத்த காணியின் 7.78 பர்சஸ் வீதம் 03 பகுதிகளைக் கொண்ட காணியில் நீண்ட காலமாக குத்தகைக்கு கொடுக்கப்படாமல் மூவரினால் அனுபவிக்கப்பட்டு வருவதுடன், முதலாவது பந்தி தற்போது நகர சபையின் அங்கீகாரம் இன்றி நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டிடம் ஒன்று மற்றும் பாதைக்கு முகப்பக்கமாக உள்ள வேலிகள் போடப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீடு கிடைத்த பின்னர் குழுவின் பரிந்துரையின் படி இந்தக் காணிகளில் உள்ள அங்கீகாரமற்ற வதிபவர்கள் தொடர்பாக எதிர் காலத்தில் தீர்மானம் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | அங்கீகாரமற்ற வதிவோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நகர சபைக்குச் சொந்தமான வெஹெர வத்த காணியின் நிஷ்ஷங்க மாவத்தையில் மூன்றாவது ஒழுங்கையில் அமைந்துள்ள நகர சபைக்குச் சொந்தமான காணி 03 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன், அங்கு நகர சபையின் அங்கீகாரமின்றி வேலைகள் பூர்த்தி செய்யப்படாத 02 கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தது. மேலும், இந்தக் காணியும் குத்தகைக்கு கொடுக்காமல் நீண்ட காலமாக தனியார் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக நீர் வழங்கலும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீடு கிடைத்த பின்னர் குழுவின் பரிந்துரையின் படி இந்தக் காணிகளில் உள்ள அங்கீகாரமற்ற வதிபவர்கள் தொடர்பாக எதிர் காலத்தில் தீர்மானம் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | அங்கீகாரமற்ற வதிவோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | ஏனைய நிறுவனங்களின் பேரில் பதிவு செய்யப்பட்டிருந்த சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 04 வாகனங்களின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | குருநாகலை போதனா வைத்தியசாலையின் முற்பகுதியில் பொது கழிவறைக்காக ஒதுக்கப்பட்டிருந்த 4.74 பர்சஸ் இற்கான காணி அரச காணியொன்றாக காணப்பட்ட போதிலும், அதனை சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. | மாநகர சபைக்கு உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என. | சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டும். |
| (ஊ) | பொது மற்றும் மின்சாரக் களஞ்சியம் தொடர்பான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,447,137 தொகை பெறுமதியான 59 வகையான இருப்பு விடயங்களில் பற்றாக்குறையும் மற்றும் ரூபா 173,984 தொகை பெறுமதியான 27 இருப்பு விடயங்களில் மிகையும் காணப்பட்டதுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2023 மே 31 திகதி மற்றும் ஜூன் 01 திகதி அளவிலும் மேலும், ரூபா 864,102 தொகை பெறுமதியான 46 விடயங்களில் பற்றாக்குறையும் மற்றும் ரூபா 266,786 தொகை பெறுமதியான 30 இருப்பு விடயங்கள் மிகை ஒன்றும் காணப்பட்டது. | 2023 ஆண்டில் பண்டக் கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு முடிந்ததுடன், 2022 பண்டக் கணிப்பீட்டில் பண்டங்கள் இனங்காணப்பட்ட தவறுகளையும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | பற்றாக்குறைகளுக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்யப்பட வேண்டும். |

### 3.9 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டின் மாநகர சபை ஏற்பாடுகளின் மீது சுந்தராப்பொல திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் திருத்த வேலை அலுவல்களுக்காக ரூபா 3,000,000 தொகை மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு ஒப்பந்த நிறுவனம் ஒன்றுடன் ரூபா 2,610,983 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | உடன்படிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் ஏற்பாடுகளின் மீது சுந்தராப்பொல திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நிருவாகக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 34,054,468 தொகைக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்காக | மீதி வேலைகளுக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், ஏற்பாடுகள் கிடைத்த பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என. | பெறுகை மேற்கொண்டு ஒப்பந்தக்காரர் ஒருவரை கண்டறிதல் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்த வேலைகளுக்காக 2022 ஆண்டின் போது ரூபா 10,708,634 தொகை கடன் கொடுத்தோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | இடைநிறுத்தப்பட்டிருந்த நிர்மாண வேலை ஒன்றிற்காக 2022 மே 21 திகதி செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,445,847 இற்கான முற்பணத் தொகையொன்று மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | ஆளுனரின் இலக்கம் NWP/GOV/AD/02/06/13 மற்றும் 2022.07.02 திகதிய கடிதத்தின் படி தற்போது இந்த நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. முற்பணத் தொகையிலிருந்து பில்பத்திரத்தின் பெறுமதியை கழித்து மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக எதிர் காலத்தில் மிகை விதிப்பு விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2021 ஆண்டின் உள்ளூராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் ரூபா 9,813,676 இற்கான ஏற்பாடொன்று அங்கீகரிக்கப்பட்டு அதற்காக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு ஒப்பந்த நிறுவனம் ஒன்றுடன் ரூபா 9,191,808 இற்கான தொகையொன்றிற்காக பஸ் நிலையத்தின் மேல் மாடியின் கழிவறை முறைமையை நிர்மாணிப்பதற்காக 2021 செப்தம்பர் 09 திகதி உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன், இந்த செயற்திட்டம் 2021 திசெம்பர் 09 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 1,838,311 தொகை வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணம் என வழங்கப்பட்டு ரூபா 1,753,404 இற்கான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தக்காரரினால் வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டு 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | ஒப்பந்தக்காரரின் வருமானத்தை ஆவணப்படுத்தி நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.10 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 07 வருமானப் பரிசோதகர்கள் காணப்பட வேண்டிய | வெற்றிடங்களை நிரப்பும் படி விண்ணப்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை | வெற்றிடங்களை நிரப்புவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் 2023 திசெம்பர் 31 திகதி அளவில் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் கடமையாற்றியதுடன், நீண்ட காலமாக அந்தப் பதவிக்குரிய உத்தியோகத்தர்கள் சேர்த்தப்படாமல் அலுவலக உதவியாளர்கள், சாரதிகள், தொழிலாளர்கள், காவலாளிகள் மற்றும் நாளாந்த அடிப்படையின் மீது நியமனம் செய்யப்பட்டுள்ள 11 பேரின் மூலம் இந்த வேலைகள் அணவல் செய்யப்பட்டு வருகின்றது. | நிரப்பப்படாமையால் நீண்ட காலமாக காணப்படும் இந்த வெற்றிடங்களை ஏனைய ஆரம்ப தர ஊழியர்கள் மூலம் மற்றும் நாளாந்த ஊழியர்கள் மூலம் நிறைவேற்றிக்கொள்ளல் மேற்கொள்ளப்படுகின்றது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 பெப்ரவரி 09 திகதி நடைபெற்ற அரச கணக்குக் குழுக் கூட்டத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்பின் பந்தி இலக்கம் 1.8 படி பதவியணித் தகவல்கள் தொடர்பாக வழங்கியிருந்த கட்டளைப் படி “நிதியமைச்சை தொடர்பு கொண்டு தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளும் படி” குழுவினால் பி.க.உ. அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. எனினும், தற்போதைய நிலைமையை பரிசோதனை செய்த போது குழுவினால் வழங்கப்பட்ட கட்டளையை கடைபிடிக்காமல் 2021 பெப்ரவரி 09 திகதியின் பின்னரும் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில 71 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தது. | பொதுமக்களுக்கு அசௌகரிகங்களை ஏற்படுத்தாமல் வினைத்திறனுடனான சேவையொன்றினை வழங்கும் குறிக்கோளுடன் மாநகர சபை நிதியத்திலிருந்து செலவு மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட கருமங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக போதியளவு எண்ணிக்கையான ஊழியர் குழாம் ஒன்றினை முறைப் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | அரச கணக்குக் குழுவின் கட்டளை அதேவாறு கடைபிடிக்கப்பட வேண்டும். |

**3.11 வாகன முறைமை முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக்கு சொந்தமான 07 வாகனங்களின் மைலோ மீற்றர் செயற்படாதிருந்ததுடன், அவற்றை திருத்த வேலை மேற்கொள்ளாமல் ஓட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | திருத்த வேலைக்கு தேவையான உதிரிப் பாகங்களை பெற்றுக்கொண்டு அந்த வாகனங்களை திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மாநகர சபையில் சேவையாற்றும் சாரதிப் பதவியில் காணப்படாத 23 ஊழியர்களுக்கு வாகன சாரதிக் கடமைகள் சாட்டப்பட்டிருந்தது. | போதியளவு சாரதிகள் காணப்படாமை மற்றும் சேவையின் தேவைப்பாட்டினை கவனம் செலுத்தி தகைமைகளை உறுதிப்படுத்திய பின்னர் அவர்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | சாரதிப் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நகர சபையின் வாகன தெரிவுப் பரிசோதனையின் போது 09 வாகனங்களின் வருமான அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்ததுடன், அவற்றில் 05 வாகனங்களில் 2021 மற்றும் 2022 ஆண்டுகள் முதல் வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் ஓட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | திருத்த வேலைகளுக்காக அனுப்புதல், ஆரம்ப ஆவனங்கள் காணாமல் போதல், ஓட்ட நிலையில் காணப்படாமை, காப்புறுதிப் பத்திரங்கள் பெற தாமதம் அடைதல் என்பன வருமான அனுமதிப்பத்திரம் பெற முடியாமைக்கு காரணமாக இருந்தது. | காலவதியாகிய ஊடனே வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | நகர சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த லொறி வண்டி ஒன்று, பொப்கட் இயந்திரம் ஒன்று (Bobcat) JCB Mini Baco Loader ஒன்று நீண்ட காலம் முதல் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ள முடியாமை ஆகிய காரணங்களினால் அந்த லொறி வண்டி மற்றும் ஏனைய இயந்திரங்களின் மூலம் சேவை எதனையும் பெற்றுக்கொள்ள முடியாமல் விளைவற்று காணப்பட்டது. | பதிவு செய்வதற்கு தேவையான ஆவனங்கள் ஏதும் அதற்குரிய கோப்புக்களில் காணப்படாமையால் பதிவு செய்யவதற்கு முடியாமல் போனது என. | உரித்தினை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் திருத்த வேலைகளுக்காக அனுப்பப்பட்டிருந்த இரண்டு வாகனங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் திருத்த வேலை மேற்கொள்ளப்படாமல் வெளி கராஜ்களில் நிறுத்தப்பட்டு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | திருத்த வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான உதிரிப் பாகங்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் காணப்படுகின்றதெனவும் 64 – 7609 கொண்ட வாகனம் தற்போது அப்புறப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | திருத்த வேலைக்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | ஆணையாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி (கைத்தொழில் பிரிவின் துறைசார் திட்டம்) சபையினால் 13 செயற்திட்டங்கள் செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவற்றில் 04 திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அவ்வாறு நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள் மற்றும் அதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 127,900,000 இற்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. | கட்டுநிதிக் தட்டுப்பாடு காரணமாக செயற்திட்டங்கள் நிறைவேற்ற முடியாமல் போனதெனவும், எதிர் காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொத்ததாக சபையின் அலுவல்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |